## நவம்பர் - 1

**"கர்த்தாவே என் வாய்க்குக் காவல் வையும். என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்." - சங் 141 . 3.**

நம்முடைய கிரியைகளின் பேரிலும், வார்த்தைகளின் பேரிலும் காவல் செய்கிற காவல்காரரின் எண்ணிக்கை, நம்முடைய மனதை, நமது எண்ணங்களை காவல் செய்கிற காவலரின் வரிசை பலமுள்ளதாக இருக்கிறதற்கு சமமாக, சிறியதாக இருக்கும். இங்கே தான் நாம் முக்கியமாக தயாராயுள்ள நிலையில் இருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்." இந்த பொதுவான உண்மை விஷேசமாக சீர்திருந்தினவர்களிடத்தில் விளங்குகிறது. இவர்களுடைய நடத்தையும், மொழியும் சமமாக, மற்றவர்களைவிட, மிகவும் வெளியரங்கமாய் இருக்கிறது. தங்களுடைய இருதயங்களில் சரியான மனோபாவத்தை உடையவர்கள் முன்னிருந்ததைவிட தங்களுடைய பேசுகிற விதத்தை குறைந்த அளவில் காவல் புரிகிறார்கள். ஆனால் எல்லாவற்றிற்கும், அதிகமாக அப்போஸ்தலனின் இந்த வார்த்தைகளை ஞாபகப்படுத்த அவர்களுக்கு அவசியமாயிருக்கிறது. "ஒருவன் தன் நாவினால் பாவம் செய்யாதவனானால் அவன் பூரண புருஷன். (யாக் 3.2)

**- Z 04, 23 (R 3304).**

வார்த்தையில் தவறுவதற்குக் கிறிஸ்தவன் ஆளாகிறதினாலும், பெரும்பான்மையோர் தவறாக எண்ணுவதற்கோ, அல்லது சிறுபான்மையோர் திரித்துக் கூறுவதற்கோ, ஆளாகிறதினாலும், அவன் தன் பேச்சை நன்றாக காவல் புரிய வேண்டும். இவ்விதமாகச் செய்ய தவறினது மிகவும் அதிகமான தீமையை உண்டாக்கியிருக்கிறது. அதே நேரத்தில், அப்படி செய்வதில் கொண்டுள்ள வெற்றி, தீமையைத் தடுத்திருப்பது மட்டுமன்றி, மிகவும் அதிகமான நன்மையை செய்திருக்கிறது. நம்முடைய நாவை காவல் புரிவதற்கு மிகவும் நிச்சயமான வழி, சத்தியம் நம்முடைய மனதில் நிரப்பப்பட்டதாகவும், அதன் ஆவி நம்முடைய இருதயங்களில் பதியப்பட்டதாகவும் இருப்பதே. நாமே இதைச் செய்யக் கூடாதவர்களாயிருக்கிறதினால், நாம் கர்த்தரிடத்தில் நம்முடைய வாய்க்குக் காவல் வைப்பதற்காகவும், நம் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளுவதற்காகவும், நாம் ஜெபிப்பது எவ்வளவு தகுதியாயிருக்கிறது? பிறகு நாம் வார்த்தையில் குற்றம் செய்யமாட்டோம். **- P 34, 159.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யாத் 22.28, சங் 10.7,8; 12.3,4; 34.13; 41.5-9; 52.2-4; 59.12; 64.2-5; 106.33; 119.23,120; நீதி 4.24; 6.16-19; 8.13; 10.11,19,31,32, 11.11; 12.5,6,13,17-19; 13.3; 14.25; 15.1; 4.28; 18.21; மத் 12.34-37, ரோம 3.13,14; எபே4.25,29,31; கொலோ 4.6; தீத் 1.10,11; 3.2; யாக் 1.19,26; 3.5-10; 4.11; 1பேது 3.9,10:**

**கோபுர வாசிப்பு :- Z 06, 76 (R 3737).**

**வினாக்கள் : இந்த வசனம் சம்பந்தமாக இந்த வார அனுபவம் என்ன? அதில் உதவியாயிருந்தது எது? இடையூறாயிருந்தது எது? அவை எதில் முடிந்தன?**